## 9th Social Science Lesson 16 Questions in Tamil - புவியியல்

### 5] உயிர்க்கோளம்

1) உயிர்க்கோளம் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) புவியின் 3 வது கோளம் உயிர்க்கோளமாகும்.

ii ) இது தாவர இனங்களும் விலங்கினங்களும் வாழ்வதற்கு ஏற்ற சூழலைக் கொண்டுள்ளது.

iii ) கடல் மட்டத்திலிருந்து வளிமண்டலத்தின் கீழ் அடுக்கு (Troposphere) வரை சுமார் 20கி.மீ. உயரம் வரை உயிர்க்கோளம் பரவியுள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

2) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) கடல் மட்டத்திலிருந்து மேலும் கீழுமாக 2.5 கி.மீ வரையுள்ள ஒரு குறுகிய பகுதியில்தான் பெரும்பாலான தாவரங்களும் விலங்குகளும் வாழ்கின்றன.

ii ) உயிர்க்கோளம் பல்வேறுபட்ட சூழ்நிலை மண்டலம் (ecosystem) மற்றும் பல்லுயிர்த்தொகுதி அமைப்பாலும் (biomes) உருவாக்கப்பட்டுள்ளது.

iii ) அனைத்து உயிரினங்களும் அவை சிறியதாக அல்லது பெரியதாக இருந்தாலும் அவைகள் இனக்குழுக்களாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

3) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) விலங்கு, தாவரம் மற்றும் நுண்ணுயிரிகள் எந்த இடத்தில் வாழ்கின்றதோ அவ்விடம், அவற்றின் வாழ்விடம் எனப்படுகிறது.

(ii) பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள் வாழும் ஒரு குறிப்பிட்ட வாழ்விடத்தை வாழிட வகை என்கிறோம்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

4) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) சூழ்நிலை மண்டலம் என்பது பல்வேறு உயிரினங்களின் தொகுதி ஆகும்.

ii ) இச்சூழ்நிலை மண்டல அமைப்பில் வாழ்கின்ற உயிரினங்கள் ஒன்றோடொன்று தொடர்பு கொள்வதோடு, பிற உயிரற்ற சுற்றுச்சூழல் காரணிகளான நிலம், மண், காற்று, நீர் போன்றவற்றோடு தொடர்பு கொள்கின்றன.

iii ) சூழ்நிலை மண்டலம் மிகச் சிறிய அலகிலிருந்து உலகளாவிய சூழ்நிலை மண்டலம் அல்லது சூழல் கோளம் வரை வேறுபட்டுக் காணப்படுகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

5) கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) சூழ்நிலை மண்டலத்தைப் பற்றி படிக்கும் அறிவியல் பிரிவு சூழலியல் (Ecology) எனப்படுகிறது.

(ii) சூழலியல் பற்றிப் படிப்பவர் சூழலியலாளர் (Ecologist) எனப்படுகிறார்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

6) சூழ்நிலை மண்டலம் எத்தனை அடிப்படைக் கூறுகளைக் கொண்டுள்ளது?

a) நான்கு

b) ஐந்து

c) மூன்று

d) ஆறு

7) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு



winmeen.com

i ) உயிரற்ற கூறுகள் சுற்றுச் சூழலில் உள்ள உயிரற்ற, கரிம, இயற்பியல் மற்றும் இரசாயன காரணிகளை உள்ளடக்கியதாகும்.

ii ) உயிருள்ள கூறுகள் என்பது தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் நுண்ணுயிரிகளை உள்ளடக்கியதாகும்.

iii ) உயிருள்ள கூறுகள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்பட்டுள்ளன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

8) உற்பத்தியாளர்கள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) சூழ்நிலை மண்டலத்தில் தமக்கு வேண்டிய உணவைத் தாமே உற்பத்தி செய்து கொள்ளக்கூடிய உயிரினங்கள் உற்பத்தியாளர்கள் எனப்படும்.

ii ) தற்சார்பு ஊட்டஉயிரி (Autotrophs) என்று அழைக்கப்படுகின்றன.

iii ) இவை நிலத்தில் மட்டும் காணப்படுகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

9) நுகர்வோர்கள் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) நேரடியாக மட்டும் உற்பத்தியாளர்களைச் சார்ந்திருக்கும் உயிரினங்கள் நுகர்வோர்கள் எனப்படும்.

(ii) அவை பிறச்சார்பு ஊட்டஉயிரி (Heterotrophs) என்றழைக்கப்படுகின்றன.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

10) கீழ்க்கண்டவற்றுள் சரியான இணையைத் தேர்ந்தெடு

i ) முதல்நிலை நுகர்வோர் – ஆந்தை, முதலை

ii ) இரண்டாம் நிலை நுகர்வோர் – வரிக்குதிரை, ஆடு

iii ) மூன்றாம் நிலை நுகர்வோர் – ஆந்தை, முதலை

a) i ), ii )

b) i ) மட்டும்

c) ii ), iii )

d) iii ) மட்டும்

11) சிதைப்போர்கள் தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) இவ்வுயிரினங்கள் தங்களுக்குத் தேவையான உணவைத் தாமே தயாரிக்க இயலாதவை ஆகும்.

(ii) உயிருள்ள மற்றும் உயிரற்ற தாவரங்கள் மற்றும் விலங்கினங்களை உணவாக உட்கொண்டு வாழக்கூடியவை ஆகும்.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

12) ஆற்றல் கூறுகள் தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) உயிர்க்கோளத்தில் வாழும் அனைத்து உயிரினங்களும் தம் பணியினைச் செய்வதற்கும், ஓர் ஆற்றலை மற்றோர் ஆற்றலாக மாற்றுவதற்கும் ஆற்றலைப் பயன்படுத்துகின்றன.

ii ) சூழ்நிலை மண்டலத்தில் உள்ள பல்வேறு கூறுகளின் வழியாக, சூரிய ஆற்றல் பிற ஆற்றல் வடிவங்களாக மாற்றப்படுகிறது.

iii ) சூழ்நிலை மண்டலத்தில் ஆற்றல் ஓட்டத்தில் உற்பத்தியாளர்கள், நுகர்வோர்கள் மற்றும் சிதைப்போர்கள் பெரும் பங்கு வகிக்கின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

13) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) அனைத்து உயிரினங்களும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு ஆற்றல் மட்டம், உணவுச் சங்கிலி மற்றும் உணவு வலையினை உருவாக்குகின்றன.

ii ) சூழ்நிலை மண்டலத்தின் செயல்பாடுகள் ஆற்றல் ஓட்டத்தின் அமைப்பைச் சார்ந்துள்ளன.

iii ) இந்த ஆற்றல் ஓட்டம் சூழ்நிலை மண்டலத்திலுள்ள கரிமமற்ற மற்றும் கரிமப் பொருட்களின்பரவலுக்கும், சூழற்சிக்கும் உதவி செய்கிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

14) தொடர்பான கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியான விடையைத் தேர்ந்தெடு

(i) உயிரினங்களில் ஒரு குழுவிலிருந்து மற்றொரு குழுவிற்கு ஆற்றல் மாற்றம் பல்வேறு ஆற்றல் மட்டத்தின் வழியாகத் தொடர்ச்சியாக நடைபெறுவதை உணவுச் சங்கிலி என்று அழைக்கிறோம்.

(ii) உணவுச் சங்கிலிகள் (Food Chain) ஒன்றினையொன்று சார்ந்து, பிணைக்கப்பட்ட அமைப்பு உணவு வலை (Food Web) எனப்படுகிறது.

a) (i) மற்றும் (ii) சரி

b) (i) மற்றும் (ii) தவறு

c) (i) சரி (ii) தவறு

d) (i) தவறு (ii) சரி

15) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) உயிரினப்பன்மை என்பது ஒரு வாழ்விடத்தில் வாழ்கின்ற பல்வேறு வகையான உயிரினங்களைக் குறிப்பதாகும்.

ii ) இது காலநிலை, நிலத்தோற்றம் மற்றும் மனிதச் செயல்பாடுகளின் தாக்கத்திற்கு உள்ளாவதில்லை.

iii ) ஒரு பகுதியின் சுற்றுச் சூழல் சமநிலை மற்றும் சமூக நலனை, அதாவது சுற்றுலா, கல்வி மற்றும் ஆராய்ச்சியை இது பேணி வருகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

16) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பல்லுயிர்த்தொகுதி என்பது புவியின் சூழல் மண்டலத்தில் பல்வேறு வகையான தாவரங்களும், விலங்கினங்களும் இணைந்து வாழும் மிகப் பரந்த சூழ்நிலையியல் அமைப்பாகும்.

ii ) இங்குத் தாவரங்களும், விலங்குகளும் ஒன்றோடொன்று தொடர்பு கொண்டு கூட்டமாக உயிர்க்கோளத்தில் வாழ்கின்றன.

iii ) பல்லுயிர்த் தொகுதியை நிலத்தோற்றம், காலநிலை மற்றும் தாவரங்கள் போன்ற காரணிகள் தீர்மானிப்பதில்லை.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

17) பல்லுயிர்த் தொகுதி எத்தனை வகைப்படும்?

a) நான்கு

b) இரண்டு

c) மூன்று

d) ஆறு

18) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) ஒரு சூழலியல் பிரதேசத்தில் 70%ற்கும் மேலாக ஓரினம் சுயமான வாழ்விடத்தை இழந்துவிடுமேயானால் அவ்விடம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய வளமையங்களாகக் (Hotspot) கருதப்படுகிறது.

ii ) இந்தியாவின் இமயமலைகள், மேற்கு தொடர்ச்சி மலைகள், இந்தோ பர்மா பிரதேசம், சுந்தா நிலப்பகுதி போன்றவை வளமையங்களாகும்.

iii ) உலகில் 54 இடங்கள் உயிரினப்பன்மை தகுதி வளமையங்களாகக் (Hotspot) கருதப்படுகிறது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

19) உலகின் முக்கிய நிலவாழ் பல்லுயிர்த் தொகுதிகளை தேர்ந்தெடு.

i ) வெப்ப மண்டலக்காடுகள் பல்லுயிர்த் தொகுதி

ii ) வெப்ப மண்டல சவானா பல்லுயிர்த் தொகுதி

iii ) பாலைவனப் பல்லுயிர்த் தொகுதி

iv) மித வெப்ப மண்டல புல்வெளி பல்லுயிர்த் தொகுதி

a) i), ii), iii), iv)

b) i), ii), iii)

c) ii), iii), iv)

d) iii), iv)

20) வெப்பமண்டலக் காடுகள் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) வெப்பமண்டலக் காடுகள் பல்லுயிர்த் தொகுதி, பல்வேறு துணை பல்லுயிர்த் தொகுதிகளால் உருவாக்கப்பட்டவை.

ii) அவை வெப்பமண்டலப் பசுமை மாறாக் காடுகள், பருவகால இலையுதிர்க் காடுகள் ஆகியனவாகும்.

iii) பிற நிலவாழ் பல்லுயிர்த் தொகுதிகளை விட வெப்ப மண்டலக் காடுகள் பல்வேறு விதமான உயிரினங்களின் வாழ்விடமாகவும், முதன்மை தொழில் நடைபெறும் இடமாகவும் உள்ளது.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

21) தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) அமேசான் படுகை, காங்கோ படுகை மற்றும் இந்தோனேசியத் தீவுகள் போன்றவை மிக முக்கியமான வெப்பமண்டலக் காட்டுப் பல்லுயிர்த் தொகுதிகளாகும்.

ii) உணவு சேகரித்தல், மீன் பிடித்தல், மரம் வெட்டுதல், இடமாற்று விவசாயம் போன்ற தொழில்கள் இங்கு வாழும் மக்களின் வாழ்வதாரமாக உள்ளது.

iii) இப்பல்லுயிர்த் தொகுதியில் ஈரப்பதமான சூழ்நிலை நிலவுவதால், மலேரியா, வைரஸ் காய்ச்சல் போன்ற துருவ மண்டல நோய்களின் தாக்கம் ஏற்படுவதில்லை.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

22) லப்போச்சா என்பதை இனங்கண்டறிக.

a) விலங்கு

b) பறவை

c) ஊர்வன

d) தாவரம்

23) வெப்ப மண்டல சவானா பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) வெப்ப மண்டலப் புல்வெளிகள் பெரும்பாலும் வெப்ப மண்டலக் காடுகளுக்கும், பாலைவனங்களுக்கும் இடையே காணப்படுகின்றன.

ii) இப்பல்லுயிர்த் தொகுதி 20° முதல் 40° வட தென் அட்சங்களுக்கு இடையே காணப்படுகிறது.

iii) இப்புல்வெளிகள் சேஹல், கிழக்கு ஆப்பிரிக்காவில் சஹாராவின் தென்பகுதி மற்றும் ஆஸ்திரேலியா போன்ற இடங்களில் காணப்படுகின்றது.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

24) வெப்ப மண்டல சவானா பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) இங்கு வளரும் புற்கள் உயரமாகவும் கூர்மையாகவும் காணப்படுகின்றன.

ii) பொதுவாக வெப்பமாகவும் வறண்டும் காணப்படுவதோடு மிதமான மழைப் பொழிவையும் பெறுகிறது.

iii) இப்பல்லுயிர்த் தொகுதி 10° முதல் 20° வட தென் அட்சங்களுக்கு இடையே காணப்படுகிறது.

a) i), ii), iii)

b) i), ii)

c) ii), iii)

d) i), iii)

25) சவானா புல்வெளி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i) சவானா புல்வெளிகளின் பெரும்பாலான பகுதிகள் விவசாய நிலங்களாக மாற்றப்பட்டு வருகின்றன.

winmeen.com

ii ) இங்குக் காணப்படும் பல்வேறு விதமான விலங்கினங்கள் அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன.

iii ) சிறுத்தை, சிங்கம் போன்ற விலங்கினங்களின் எண்ணிக்கை மிக வேகமாகக் குறைந்து வருகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

26) பாலைவனப் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் தவறானவற்றைத் தேர்ந்தெடு

i ) பாலைவனப் பகுதிகள் பெரும்பாலும் கண்டங்களின் மேற்கு விளிம்புகளில் காணப் படுகின்றன.

ii ) இப்பல்லுயிர்த் தொகுதி 30° முதல் 60° வட, தென் அட்சங்களுக்கிடையே காணப்படுகின்றன.

iii ) ஆண்டுச் சராசரி மழைப்பொழிவு 50 செ.மீட்டருக்கும் குறைவாக உள்ளது.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

27) பாலைவனப் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இங்குக்காணப்படும் மண் மணலாகவும், உவர்ப்பாகவும், உள்ளதால் விவசாயத்திற்கு உகந்ததாக இல்லை.

ii ) வறட்சியைத் தாங்கக் கூடிய முட்புதர்கள், குறுங்காடுகள் (Scrubs) மற்றும் பனை போன்ற தாவரங்கள் இங்குக் காணப்படுகின்றன.

iii ) இங்கு வாழும் பழங்குடியினர் இடப்பெயர்ச்சி வேளாண்முறையினை தொழிலில் ஈடுபடுகின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

28) மிதவெப்பமண்டலப் புல்வெளி பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) மிதவெப்பமண்டல புல்வெளிகள் கண்டங்களின் உட்பகுதியில் காணப்படுகின்றன.

ii ) இப்பகுதி வெற்று நிலப்பகுதி எனவும் தரிசு நிலப்பகுதி எனவும் அழைக்கப்படுகின்றது.

iii ) அதிகமான மழைப் பொழிவு உயரமான மென்மையான புற்கள் வளர்வதற்கும், குறைவான மழைப்பொழிவு குட்டையான, மென்மையான புற்கள் வளர்வதற்கும் துணை புரிகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

29) மிதவெப்பமண்டல புல்வெளி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இப்பிரதேசங்கள் கோதுமை பயிடுவதற்குச் சாதகமாக உள்ளது.

ii ) கால்நடை வளர்ப்பு இங்கு முக்கியத் தொழிலாக உள்ளது.

iii ) இப்பகுதியில் குளிர்காலம் நீண்ட கடுங்குளிரையும், கோடைகாலம் மிதமான குளிரையும் கொண்டிருக்கும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

30) தூந்திரப் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இந்தப் பரந்த தாழ்நிலப் பகுதியானது பெரும்பாலும் உறைந்தே காணப்படுகின்றது.

ii ) ஆசியா, கனடா, ஐரோப்பா இவற்றின் வடபகுதி, மற்றும் கிரின்லாந்து, ஆர்டிக், அண்டார்டிகா ஆகியன இத்தொகுதியின் கீழ் வருகின்றன.

iii ) வெட்டுக்கிளி, ஓநாய், காட்டெருமை, பிரெய்ரி நாய் போன்ற விலங்குகள் காணப்படுகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

winmeen.com

31) தூந்திரப் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) இங்குக் காணப்படும் மிகக்குறைந்த வெப்பநிலையின் காரணமாக குறுகிய கால பருவத் தாவரங்கள் மட்டுமே இங்குக் காணப்படும்.

ii ) சுற்றுச்சூழலில் முதன்மை உற்பத்தித் திறன் மிகக் குறைந்து காணப்படும்.

iii ) இப்பகுதியில் வாழும் மக்கள் ஒரு பகுதியில் நிலைத்து வாழ்கின்றனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

32) i ) இங்கு மக்கள் தொகை மிகக் குறைவாகக் காணப் படுகிறது.

ii ) குளிர்காலங்களில் "இக்ளு" (Igloo) என்ற பனி வீடுகளிலும், கோடை காலங்களில் கூடாரங்கள் அமைத்தும் வாழ்கிறார்கள்.

iii ) ஆர்க்டிக் பகுதிகளில் பாசி இனத்தாவரங்கள் வளர்கின்றன.

பின்வருவனவற்றுள் மேற்கண்ட கூறுகளை உடையது எது?

a) மிதவெப்பமண்டல புல்வெளி

b) பாலைவனப் பல்லுயிர்த் தொகுதி

c) பாலைவனச் சோலை

d) தூந்திரப் பல்லுயிர்த் தொகுதி

33) பாலைவனச் சோலை தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பாலைவனங்கள் மற்றும் அரை வறண்டப் பாலைவனப் பிரதேசங்களில் காணப்படும் வளமான நன்னீர்ப் பகுதியாகும்.

ii ) பாலைவனச் சோலைகள் நீருற்றிலிருந்து நீரைப் பெறுகின்றன.

iii ) பேரீச்சை, அத்தி, சிட்ரஸ் பழங்கள் மக்காச்சோளம் போன்றவை பாலைவனச் சோலைக்கு அருகில் விளைவிக்கப்படுகின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

34) 1) பொருத்துக:

A) ப்ரெய்ரி – 1) வட அமெரிக்கா

B) ஸ்டெப்பி – 2) யுரேஷியா

C) பாம்பாஸ் – 3) அர்ஜென்டினா மற்றும் உருகுவே

D) வெல்ட் – 4) தென்ஆப்பிரிக்கா

E) கேன்டர்பர்க் – 5) நியூசிலாந்து

A) B) C) D) E)

a) 4 3 2 1 5

b) 1 2 3 4 5

c) 3 1 5 4 2

d) 4 1 2 5 3

35) நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நீர்வாழ் பல்லுயிர்த்தொகுதியில் காணப்படும் உயிரினங்கள் ஒன்றுடனொன்று தொடர்பு கொண்டு அவை வாழுகின்ற சூழலுக்கு தக்கவாறு தங்களைத் தகவமைத்துக் கொண்டுள்ளன.

ii ) நிலவாழ் உயிரினங்களைப்போல நீர்வாழ் உயிரினங்களின் மீதும் உயிரற்ற காரணிகளின் தாக்கம் காணப்படுகிறது.

iii ) நீர்வாழ் பல்லுயிரித்தொகுதியினை நன்னீர்வாழ் பல்லுயிரித்தொகுதி மற்றும் கடல்நீர்வாழ் பல்லுயிர்த்தொகுதி என இரண்டு வகைகளாக வகைப்படுத்துகிறோம்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

36) நன்னீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) நன்னீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியானது ஏரிகள், குளங்கள், ஆறுகள், ஓடைகள், சதுப்பு நிலங்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது.

ii ) இத்தொகுதி நீரின் கொள்ளளவு, நீரோட்டம், ஆக்சிஜன் அளவு, வெப்பநிலை ஆகிய உயிரற்ற காரணிகளின் தாக்கத்திற்கு உள்ளாகிறது.

iii ) மனிதர்கள் தங்களுக்குத் தேவையான குடிநீர், நீர்ப்பாசனம், சுகாதாரம் மற்றும்

தொழிற்சாலைகளுக்குத் தேவையான நீரைப் பெறுவதற்கு நன்னீர்வாழ் பல்லுயிர்த்தொகுதியைச்சார்ந்தே உள்ளனர்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

37) கடல்நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) புவியில் காணப்படும் மிகப்பெரிய நீர்வாழ்பல்லுயிர்த்தொகுதி கடல்நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியாகும்.

ii ) கடல்நீரில் காணப்படும் பல்வேறு வகையான தாவரங்கள் மற்றும் விலங்கினங்களுக்கு வாழ்விட ஆதாரமாக இத்தொகுதி உள்ளது.

iii ) நிலவாழ் பல்லுயிர்த் தொகுதிகளைவிட மிக வேகமாவும், சிறப்பாகவும் அனைத்துப் பகுதிகளுக்கும் நீர்வாழ் உயிரினங்கள் இடம் பெயர்கின்றன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

38) கடல்நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதி தொடர்பான கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) விலங்குகளைத்தவிர, தாவர இனங்களான பெரிய கடற்பூண்டு, கடற்பாசிகள் மற்றும் நீரில் மிதக்கும் தாவரங்களும் அதிகளவில் இத்தொகுதியில் காணப்படுகின்றன.

ii ) நீர்வாழ் பல்லுயிர்த் தொகுதியானது தாவரங்கள் மற்றும் விலங்குகளுக்கு மட்டுமல்லாமல் மனித இனத்திற்கும் மிக முக்கியமானதாக உள்ளது.

iii ) இத்தொகுதியில்காணப்படும் சில நன்மைகளாவன அதிகளவில் மீன்பிடித்தல், சுற்றுச்சூழல் மாசுபாடு மற்றும் கடல்மட்டம் உயருதல் ஆகும்.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

39) கீழ்க்கண்டவற்றுள் சரியான விடையைத் தேர்ந்தெடு

i ) பல்லுயிர்த் தொகுதி என்பது ஆழ்கடல் அகழி முதல் பசுமைமாறாக் காடுகள் வரை பரவிக்காணப்படுகிறது.

ii ) சில உயிரினங்களின் அழிவிற்கும் மற்றும் இடமாற்றத்திற்கும் மனிதனின் நடவடிக்கைகள் முதன்மைக் காரணியாக உள்ளது.

iii ) புவியின் சில பகுதிகளில் அதிக உயிரின வளங்கள் மற்றும் அதிக உயிரினப் பாதிப்புகள் ஏற்படும் பகுதிகளும் உள்ளன.

a) i ), ii ), iii )

b) i ), ii )

c) ii ), iii )

d) i ), iii )

40) இந்தியாவில் எத்தனை முக்கியமான உயிர்க்கோளக் காப்பகங்கள் உள்ளன?

a) 17

b) 19

c) 18

d) 16